## ஆயுர்வேத வைத்திய சபை – 2016

ஆயுர்வேத வைத்திய சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1961 இன் 31 ஆம் இலக்க ஆயுர்வேத அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பகுதியின் 21 பீ பிரிவு மற்றும் 21 சீ பிரிவுகள் என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக்க கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

ஆயுர்வேத மருத்துவ சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) 1961 இன் 31 ஆம் இலக்க ஆயுர்வேத அதிகாரச் சட்டத்தின் III ஆவது பகுதியின் 11(1)(உ) பிரிவு | பதிவு செய்யப்பட்ட ஆயுர்வேத வைத்தியர்கள் மூவர் சபையின் அங்கத்தவராக நியமிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டு வரையும் மூன்று வைத்தியர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2005 யூலை 05 ஆம் திகதிய 14/13/08(03) ஆம் இலக்க ஆயுர்வேத மருத்துவ சபை பத்திரம் | சபையில் பதிவு செய்துள்ள சகல வைத்தியர்களும் 05 வருடங்களுக்கு ஒரு தடவை பதிவினை புதுப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் இறுதியளவில் 05 வருடங்களுக்கு மேலான பதிவினையுடைய 15,644 வைத்தியர்கள் பதிவினை புதுப்பித்திருக்கவில்லை. ஆகையால் சபையானது ரூபா 16,402,500 வருமானத்தை உழைத்திருந்தது. பதிவினை புதுப்பிப்பதற்கு முறையான முறைமை இனங்காணப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| (i) நிதிப் பிரமாணம் 169 | 2006 ஆம் ஆண்டிலிருந்து 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் கிடைக்கப்பெற்ற ரூபா 9,780 தெகையான 27 காசுக் கட்டளைகளை தேறுவதற்கு முன்னர் சேவைகள் வழங்கப்பட்டிருந்ததுடன் அத்தகைய 27 காசு கட்டளைகளின் மூலங்கள் கணக்காய்விற்காக கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ii) | நிதிப்பிரமாணம் 371(2) | உப செயல்நிமித்த கட்டுநிதி எதற்காக வழங்கப்பட்டதோ அந்த நோக்கம் முடிவடைந்த பின்னர் உடனடியாக தீர்க்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது 7 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 199,750 தொகையான உபகட்டுநிதி 05 தொடக்கம் 18 நாட்கள் வரையிலான வீச்சிலான காலதாமதத்தின் பின்னர் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (iii) | நிதிப்பிரமாணம் 751 | ரூபா 23,828, ரூபா 314,548 மற்றும் ரூபா 34,552 பெறுமதியான முறையே 04 எழுதுனர் கதிரைகள், 16 உருக்கு அறைகள் மற்றும் 02 இரும்பு அலுமாரிகள் இருப்புக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | நிதிப் பிரமாணம் 756 | திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 5,936,355 பெறுமதியான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக 2017 யூன் 30 ஆந் திகதி வரையிலும் பௌதீக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

(ஈ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை

| | | |
|---|---|---|
| (i) | VII ஆம் அத்தியாயத்தின் 12:2:1, 12:2:2 மற்றும் 12:2:3 ஆம் பந்திகள் | பதில் கடமை புரிவதற்கு நியமிக்கப்பட்ட பதவி அவர் வகிக்கும் நிரந்தர பதவிக்கு மேற்பட்ட பதவியொன்றாக இருக்க வேண்டிய போதிலும், பதிவாளர் பதவியில் பதில் கடமை புரிவதற்காக 2013 யூலை மாதத்திலிருந்து ஆயுர்வேத வைத்தியர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். 2017 யூலை மாதம் வரையில் 04 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும், அப்பதவிக்கு நிரந்த உத்தியோகத்தரொருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான சபையின் நிதிசார் விளைவுகள் ரூபா 1,153,359 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 712,624 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதிசார் விளைவுகளில் ரூபா 440,735 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. அரசாங்கத்தின் மானியம் ரூபா 750,000 தொகையினால் அதிகரித்தமை மற்றும் ஆயுர்வேத வைத்தியர்களிற்கான பதிவுக் கட்டணம் ரூபா 1,642,154 ஆல் அதிகரித்தமை மேற்குறித்த அதிகரிப்பிற்கான பிரதான காரணமாகவிருந்தன.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 4 ஆண்டுகளின் நிதிசார் விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது, 2012 ஆம் ஆண்டிலிருந்த ரூபா 96,820 பற்றாக்குறை 2016 ஆம் ஆண்டளவில் ரூபா 1,153,359 மிகைக்கு தளம்பல்களுடன் அதிகரித்திருந்தது. ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைக் கருத்திற் கொள்ளும் போது 2012 ஆம் ஆண்டில் ரூபா 3,623,317 பங்களிப்பு 2016 ஆம் ஆண்டளவில் ரூபா 7,117,247 வரை அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1961 இன் 31 ஆம் இலக்க ஆயுர்வேத அதிகாரச்சட்டத்தின் 03 ஆம் பகுதியின் 18 ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் பிரதான நோக்கங்கள் பின்வருமாறாகவுள்ளன.

- ஆயுர் வேதத்தை கற்பிக்கும் ஏதேனும் நிறுவனமொன்று இச் சட்டத்தின் செயற்பாடுகளுக்காக அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட வேண்டுமென்பதை அமைச்சருக்கு பரிந்துரைத்தல்.

- ஆயுர்வேத வைத்தியர்கள், ஆயுர்வேத மருந்துகளைத் தயாரிப்பவர்கள், ஆயுர் வேத உதவிச் சேவையாளர்களாக ஆட்களை பதிவு செய்தல், அவ்வாறு பதிவு செய்யப்பட்டவைகளை இரத்துச் செய்தல் அல்லது இடை நிறுத்துதல்.

- ஆயுர் வேத மருத்துவர்களினதும், ஆயுர்வேத மருந்து தயாரிப்பாளர்களினதும் ஆயுர்வேத உதவிச் சேவைகளினதும் தொழில் துறையில் நடத்தைகளை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல் போன்ற நோக்கங்களுக்குரிய சட்ட விதிக்கோவைகளைத் தயாரித்தல்,

  மேற்குறித்த நோக்கங்களை நிறைவேற்றுவது தொடர்பான பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் புதிய மருத்துவர்களை பதிவு செய்தல் 65 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன், ஆயர்வேத வைத்தியர்களிற்கான டிப்ளோமாவிற்கு பதிவு செய்தல் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 94 சதவீதத்தால் குறைவடைந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போதும் மற்றும் முன்னைய ஆண்டின்போது போலி வைத்தியர்கள் தொடர்பாக முறையே 34 மற்றும் 71 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றிருந்த போதிலும், அதில் முறையே 10 மற்றும் 26 முறைப்பாடுகள் 2017 யூன் 16 அளவிலும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. அத்தகைய விசாரணைகளில் முறையே 10 விசாரணைகள் மற்றும் 26 விசாரணைகள் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன் அத்தகைய பூர்த்தி செய்யப்பட்ட முறையே 24 மற்றும் 45 விசாரணைகள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. ஆயுர்வேத அதிகாரச் சட்டம் மற்றும் ஒழுக்காற்று கட்டளைகளை காலத்தின் தேவைக்கேற்ப வகையில் திருத்தம் செய்யப்படாமையால் அவ்வாறு புலனாய்வு செய்யப்பட்ட விசாரணைகளில் கண்டிப்பு மற்றும் அறிவுறுத்துதல்கள் வழங்கல் மாத்திரம் இடம் பெற்றிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த 11 செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆயர்வேத வைத்தியர்களின் வேண்டுகையின் பேரில் ஆங்கில மொழியில் சபையின் பதிவுச் சான்றிதழை வழங்குவதற்கு தீர்மானித்திருந்தமையால் 1,910 பழைய சான்றிதழ்கள் இரத்துச் செய்யப்பட்டு அதற்கு பதிலாக 2015 ஆம் ஆண்டில் ரூபா 38,454 கிரயத்தில் 500 புதிய சான்றிதழ்கள் அச்சிடப்பட்டிருந்தது. இருந்தபோதிலும், அச்சிடப்பட்ட புதிய சான்றிதழ்கள் அதிலிருந்தான பிழைகளால் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஆயர்வேத வைத்தியர்களின் பதிவின் புதுப்பித்தலில், 2015 ஆம் ஆண்டில் புதிய சான்றிதழை வழங்குவதற்கும் 6000 சான்றிதழ்களை அச்சிடுவதற்கும் தீர்மானித்திருந்தது. இருந்த போதிலும், 2017 ஆகஸ்ட் வரையிலும், புதிய சான்றிதழ்கள் அச்சிடப்பட்டிருக்கவில்லை. ஆகையால் உரிய பதிவு சான்றிதழ்கள் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளிற்கான பதிவு புதுப்பித்தலிற்காக செலுத்திய 3,469 ஆயர்வேத வைத்தியர்களுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பாரம்பரிய ஆயுர்வேத வைத்தியர்களிற்கான பதிவிற்கான எழுத்துப் பரீட்சையினை நடாத்துதல் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், 2014 ஆம் ஆண்டிற்கு பிறகு 2016 மே 02 இலேயே எழுத்து பரீட்சை நடாத்தப்பட்டிருந்தது. 519 விண்ணப்பங்கள் அந்த பரீட்சைக்காக பெறப்பட்டிருந்ததுடன் 401 விண்ணப்பதாரிகள் மாத்திரம் பரீட்சைக்கு சமூகமளித்திருந்தனர். எனினும், சபையானது 2017 யூன் 16 வரையிலும், பெறுபேறுகளை வெளியிடுவதற்கு தவறியிருந்தது.

(ஈ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையால் பதிவுசெய்யப்பட்ட ஆயுர்வேத வைத்தியர்களில் அவர்களின் தகவல்களை கண்டுபிடிக்க முடியாதிருந்த 1,624 ஆயுர்வேத வைத்தியர்கள் தொடர்பில் காலதாமதமில்லாமல் சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதனால், அதனை பயன்படுத்தி போலி வைத்தியர்கள் வைத்தியம் செய்வதற்கான வாய்ப்பு இருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

சபையின் நோக்கங்களை அடைவதற்காக பெறப்பட்ட காசு உரிய சந்தர்ப்பங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருக்காததுடன், ரூபா 4,311,989 மற்றும் ரூபா 5,406,214 தொகைகள் முறையே 2015 திசெம்பர் 31 மற்றும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான வங்கிக் கணக்கிலிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவு மற்றும் 2004 பெப்ரவரி 24 இன் 01/2004 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம், நியதிச்சட்ட சபையினால் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் சபையின் 2016 ஆம் ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் 03 மாதங்கள் மற்றும் 15 நாட்கள் தாமதத்துடன் 2017 யூன் 15 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

17 வருமான விடயங்களின் 11 வருமான விடயங்கள் தொடர்பாக பாதிடப்பட்ட மற்றும் உண்மையான வருமானம் என்பவற்றுக்கிடையில் 3 சதவீதம் முதல் 100 சதவீதம் வரை முரண்கள் அவதானிக்கப்பட்டதுடன், 30 செலவின விடயங்களில் 05 விடயங்கள் தொடர்பில் பாதிடப்பட்ட மற்றும் உண்மையான செலவினத்திற்கிடையே 2 சதவீதம் தொடக்கம் 123 சதவீதம் வரையிலான முரண்கள் அவதானிக்கப்பட்டது. ஆகையால், பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்காதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5.3 ஆண்டறிக்கையினை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்

2015 ஆம் ஆண்டிற்கான மருத்துவ சபையின் ஆண்டறிக்கை 2003 யூன் 02 இன் பீஈடி/12 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பிரிவின் பிரகாரம் 2017 ஆகஸ்ட் 10 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது சபைத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. உரிய தேவைப்பாடுகளை இனங்காண்பதன் மூலம் முறையாக சான்றிதழ்களை அச்சிடவும், போதிய சான்றிதழ் இருப்பை பராமரிக்கவும் தவறியது தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.